**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS.. No. | : | **174/2009** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | பிச்சை | CASTE | : | |
| S/O | சடையாண்டி | RELIGION | : | இந்து |
| VILLAGE | சரந்தாங்கி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **47** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30.01.2026**

**குறுக்கு விசாரணை**

1. 1ம் பிரதிவாதி எனது அப்பா. 4ம் பிரதிவாதி எனது சகோதரர். 4ம் பிரதிவாதி 2010ல் தாக்கல் செய்த எதிர்உரையை நான் படிக்கவில்லை. மேற்படி எதிர்உரையை எனது அப்பா ஏற்றுக்கொண்டார் என்றால் எனக்குத்தெரியாது. மேற்படி எதிர்உரையில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞர் படித்துக்காண்பித்தார் என்றால் சரியல்ல. எதிர்உரை வழக்குச்சொத்துக்கள் எனது அப்பாவின் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதால்தான் அதை படிக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. வழக்குச்சொத்துக்கள் எனது அப்பாவின் பூர்வீக சொத்துக்கள் என்பதைக்காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 03.10.2008, 17.10.2008 தேதிகளில் வழக்குச்சொத்துக்களை 6ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த விவரம் வழக்கு தாக்கல் செய்த காலத்திலேயே எனக்குத் தெரியும் என்றால் சரிதான். வழக்குத்தாக்கல் செய்தபோது 6ம் பிரதிவாதி தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும் 2025ல்தான் சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 2009ல் தாக்கல் செய்த வழக்கில் காலதாமதமாக 6ம் பிரதிவாதியை சேர்த்துள்ளதால் அவருக்கு எதிராக வழக்கு காலாவதி ஆகிவிட்டது என்றால் சரியல்ல.

3. 08.08.2008ல் எனது அப்பா சர்வே எண் 184/24ல் உள்ள சொத்தை ஆசிரமத்துக்கு விற்பனை செய்தார் என்றால் சரிதான். மேற்படி சொத்தை எனது அப்பா தனிப்பட்ட முறையில் விற்பனை செய்தார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கிரையப்பத்திரத்தில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்

கையெழுத்து போட்ட கிரையப்பத்திரத்தை நான் தாக்கல் செய்ய இயலும். எனது அப்பாவின் அம்மா பெயர் வீரம்மாகாளி என்றால் சரிதான்.

4. வழக்கு 1ம் இலக்கச்சொத்து எனது பாட்டி வீரம்மாகாளிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அவர் பெயரில் பட்டா இருந்தது என்றாலும் எனக்குத்தெரியாது. மேற்படி விவரம் 2010 ல் தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்குத்தெரியாது. வழக்கின் 3ம் இலக்கச்சொத்து எனது தாத்தா சுப்பனுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாக பட்டா உள்ளது என்றால் எனக்குத்தெரியாது. வழக்கின் 4ம் இலக்கச்சொத்தான 5 செண்டு கிராமநத்தம் என்றால் எனக்குத்தெரியாது.

5. எனது அப்பாவின் அனுபவத்தின் அடிப்படையில் 4ம் இலக்கச்சொத்துக்கு அனுபவ பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, அது எனது பாட்டனார் காலத்து சொத்து. 4ம் இலக்கச்சொத்து எனது பாட்டனார் பெயரில் இருந்ததாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் 2ம் இலக்கச்சொத்து தனிப்பட்ட சொத்து என்றாலும் பூர்வீக சொத்து கிடையாது என்றாலும் சரியல்ல.

6. வழக்குச்சொத்துக்கள் எனது அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்பதால் அவற்றை எனது அப்பா சட்டப்படியாகத்தான் 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றாலும் அதனால் அந்த சொத்துக்களின் எனக்கு பங்கு இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1, 2 ஆவணங்கள்படி வழக்குச்சொத்துக்கள் 2008ம் ஆண்டு முதல் 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ளன என்றால் சரியல்ல.

7. வழக்குச்சொத்துக்களில் நான் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்து எனது அனுபவத்தில் இல்லாததால் நான் சரியான மதிப்பீடு செய்து நீதிமன்றக்கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.